செ.வெ.எண்: 869 நாள்: 28.12.2019

**ஓட்டுப்பெட்டியை எடுத்து ஓட முயன்ற நபர் மீது குண்டாஸ் சட்டம் பாய்ந்தது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் அதிரடி நடவடிக்கை.**

---

ஊரக உள்ளாட்சித் தேர்தலின் போது ஓட்டுப்பெட்டியை எடுத்து ஓட முயன்ற நபர் மீது குண்டாஸ் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

27.12.2019 அன்று நடைபெற்ற முதற்கட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல் வாக்குப்பதிவு அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களில் வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடந்து முடிந்தது. குறிப்பாக விராலிமலை ஊராட்சி ஒன்றியம், வெம்மணி ஊராட்சி, பெரியமூலிப்பட்டியில் வாக்குப்பதிவு முடிவுற்று வாக்குப்பெட்டி முறையாக மூடி முத்திரையிடப்பட்ட பின் வாக்குச்சாவடியிலிருந்து வாக்குப்பெட்டியை எடுத்து ஓட முயன்ற பெரியமூலிப்பட்டியை சேர்ந்த 29 வயதுடைய மூர்த்தி என்பவரை அங்கு தேர்தல் பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் உடனடியாக அந்த நபரை கைது செய்ததுடன், வாக்குப்பெட்டி பத்திரமாக மீட்கப்பட்டு அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து தேர்தல் விதிமீறலில் ஈடுப்பட்ட மேற்கண்ட நபரை குண்டாஸ் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டு அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

மேலும் ஊரக உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்தும் வகையில் 30.12.2019 அன்று நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல் வாக்குப்பதிவு மற்றும் 2.1.2020 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணும் நாளன்றும் தேர்தல் விதிமீறல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்கள்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**